# இரகசிய வருகையைக் குறித்து சிந்திக்க சில கேள்விகள்

*கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்றும், கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக <u>அநேகர் எழும்பி அநேகரை வஞ்சிக்கும் செயல் இருக்கும் என்றும்</u> <u>இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர் பவுலும் எச்சரித்திருப்பதைக் கவனியுங்கள்</u>* (மத்தேயு–24: 5,24 & 2தெச–2: 3) **வஞ்சகம்** *என்றால் சத்தியத்தைப் போல தோற்றமளிக்கிறதாக இருக்கும், ஆனால் உண்மைச் சத்தியமாக இருக்காது.*

பின்வரும் கேள்விகளை விவாதத்திற்காகவோ தர்க்கம் பண்ணுவதற்காகவோ, வாக்குவாதத்தை உண்டுபண்ணவோ கொடுக்காமல், வேதத்தில் உள்ள வசனங்களை நீங்கள் ஜெபத்தோடு ஆராய்ந்து பார்த்து, சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்திடத் துணை செய்வதற்காகவே கொடுத்திருக்கிறோம்! “**இரகசிய வருகை**” என்பது ஆதிசபையின் காலத்திலிருந்தே சபைகளிலோ, சபைகளுக்கு எழுதப்பட்ட நிரூபங்களிலோ எங்கும் காணப்பட முடியாத **நூதன உபதேசமாக** இருக்கிறது. கர்த்தருடைய வருகை இரகசியமாக இருக்கும் என்பதற்கு வேதாகமத்தில் ஒரு ஆதாரமும் இல்லை, அவர் வெளிப்படையாகவே வருவார் என்பதற்கோ வேதாகமத்தில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. எனவே நாம் ஜாக்கிரதையுடனும் விழிப்புடனும் தேவனுடைய வார்த்தைகளாகிய வேதப் புத்தகத்தை ஆய்ந்து பார்ப்போமாக!

## சிந்தனைக்கான கேள்விகள்:

1. “இரகசிய வருகை” என்பதைக் குறித்த உபதேசப்போதனை முதன்முதலில் எப்போது ஆரம்பித்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

   *கி.பி. 1826 முதல் 1830 ஆண்டு காலங்களில் தான் முதன்முதலில் கொண்டு வரப்பட்டது.*

2. உபத்திரவ காலத்திற்கு முன்பே சபையானது “இரகசியமாக எடுத்துக்கொள்ளப்படும்” என்ற போதனையை உருவாக்கியவர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

   *எட்வர்டு இர்வின் என்பவர் மூலமாக கி.பி. 18ஆம் நூற்றாண்டில் இது அறிமுகப்படுத்தப்பட்டு கொண்டுவரப்பட்டது.*

3. இரகசிய வருகையைக் குறித்த போதனை உலக அளவில் பரவி பிரபல்யமாவதற்குத் துணை செய்தது எது தெரியுமா?

   *1909ல் முதன்முதலில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட ஸ்கோ.:பீல்டு என்பவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட ஸ்கோ.:பீல்டு* (Scofield Bible) *என்ற வேதாகமம் தான் இந்த உபதேசம் பெரிய அளவில் பரவுவதற்குக் காரணமாக இருந்தது.*

4. உலகமனைத்திற்கும் ***ராஜாதி ராஜா***வாக இருக்கும்படி வருகிறவர் ஒரு பெருந்திரளான உலக மக்கள் கூட்டத்திற்குத் தெரியாமல் <u>**ஏன் இரகசியமாக**</u> வரவேண்டும்?

5. திருடர்களும், தவறு செய்பவர்களும், கொள்ளைக்காரர்களும், தாங்கள் செய்வது யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்று கருதுபவர்களும் தான் தெரியாமல். இரகசியமாக, பதுங்கிப் பதுங்கி வருவார்கள். அப்படியென்றால் யாருக்கும் தெரியால் வருவதற்கு இயேசு திருடனா? தவறு செய்தவரா? அல்லது அவர் ஒரு கொள்ளைக்காரனா?

6. <u>**அப்போஸ்தலர்–1: 11ல்**</u> “*உங்களிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர்* ***எப்படி*** *உங்கள் கண்களுக்கு*

*முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ,* ***அப்படியே*** *மறுபடியும் வருவார்''* என்ற வசனத்தின்படி பார்த்தால், அப்பொழுது இயேசு அவர்கள் கண்களுக்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்டாரா அல்லது யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொள்ளப்பட்டாரா? அவர் ''அப்படியே மறுபடியும் வருவார்'' என்று சொல்லப்பட்டால் அதன் பொருள் என்ன?

7. *இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப்* ***பார்த்துப்*** *புலம்புவார்கள். அப்படியே ஆகும்* என்று **வெளி–1: 7**லும், **மத்தேயு–24: 30ல்** *மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும்* ***கண்டு*** புலம்புவார்கள் என்றும் இயேசுவே கூறியிருக்கும்போது அது எப்படி இரகசிய நிகழ்ச்சியாக இருக்கும்?

8. பெரிய ஊழியர்களால், வல்லமையான அபிஷேகம் பெற்ற ஊழியர்களால் ஒரு கருத்து சொல்லப்படுகிறது, எழுதப்பட்டிருக்கிறது, தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் அறிவிக்கப்படுகிறது என்பதற்காக அதுவே உண்மை என்று அர்த்தமாகிவிடுமா? அவர்களின் கருத்தும் போதகமும் தேவனுடைய வேதவசனங்களில் இருக்கிறதா இல்லையா என்று ஆராய்ந்து அறியப்பட வேண்டாமா?

9. தேவ **எக்காளத்தோடும்,** பிரதான தூதனுடைய **சத்தத்தோடும், ஆரவாரத்தோடும்,** மகிமையின் **பிரகாசத்தோடும்** இயேசு வருவது ஒருவருக்கும் கேட்காத, யாராலும் பார்க்க முடியாத இரகசிய செயலாகவா இருக்கும்?

10. மனுஷகுமாரனுடைய வருகையின்போது பூமிக்கு மேலே உள்ள சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் இவை அனைத்தின் ஒளியும் அணைக்கப்பட்டு, ஆகாயம் முழுவதும் இருண்டுபோயிருக்கும் போது மக்கள் அதைக் கண்டு திகைத்துக் கொண்டிருக்கையில், மனுஷ குமாரன் பிரகாசத்தோடு உதிப்பதை யாவருடைய கண்களும் காணுமானால் அது இரகசியமான வருகையாகவா இருக்கும்?

11. *''இதோ, ஒரு* ***இரகசியத்தை*** *உங்களுக்கு அறிவிக்கிறேன், நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை, ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப் படுவோம்''* என்ற **1கொரிந்தியர்–15: 51,52**ல் உள்ள இந்த வசனங்கள் கர்த்தர் இரகசியமாக வருவதைக் குறிக்கின்றனவா அல்லது நம்முடைய சரீரங்கள் எவ்வளவு வேகமாக மறுரூபமாக்கப்படும் என்பதைக் குறிக்கின்றனவா?

12. ''இரகசிய வருகை'' என்பது வேறு ''இரண்டாம் வருகை'' என்பது வேறு என்று ஒருவேளை நீங்கள் கருதுவீர்களானால், இயேசுவின் வருகையில் மூன்று வருகைகள் இருக்கின்றனவா?

**அதாவது:**
1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு **இரட்சகராக** வந்தது–இது முதலாம் வருகை
2. உபத்திரவ காலத்திற்கு முன்பாக **இரகசியமாக** வருவது– இது 2ஆம் வருகை
3. உபத்திரவ காலம் முடிந்ததும் **பகிரங்கமாக** வருவது– இது 3ஆம் வருகை

என்று தானே அர்த்தமாகிறது!

''இயேசு முதல் முறை வந்தார் என்றும், மறுபடியும் அவர் வருவார்'' என்றும் இரண்டு வருகைகளைக் குறித்துத் தான் வேதாகம வசனங்கள் சொல்கின்றன. மறுபடியும் மறுபடியும் வருவார் என்றோ அல்லது இரகசியமாக வந்துவிட்டு அடுத்து பகிரங்கமாக வருவார் என்றோ அவைகள் சொல்லவில்லை என்பதை நிதானித்துப் பாருங்கள்!

**மேலும் விபரங்களுக்கு**
PR K.JOSEPH
God's House Ministries
Jesus Nagar, Kallal Road,
Kalayarkoil, Sivagangai
Cell: 9487877860